28.02.2024 வா.சா.2 சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்பட்டது. (ஒ.எஸ்.எண்.204/2018) திரு.கனகராஜ்.

<u>பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை –</u>

தாவா பிராதில் சொல்லப்பட்டுள்ள சங்கத்தின் பதிவு எண் எந்த ஆண்டு பதிவு செய்யப்பட்டுள்ளது என்று சொல்லியுள்ளேன் என்றால் ஆமாம். அந்த சங்கத்தின் பதிவு சான்றினை நானோ அல்லது சந்திரராஜோ தாக்கல் செய்துள்ளோமா என்றால் தாக்கல் செய்துள்ளோம். எந்த தேதியில் எந்தவருடம்,எந்தமாதம் பதிவு செய்யப்பட்டுள்ளது என்று சொல்ல முடியுமா என்றால் ஆவணத்தைப்பார்த்து தான் சொல்ல முடியும் எனக்கு படிப்பறிவு இல்லை. சங்கத்தில் மொத்தம் எத்தனை உறுப்பினர்கள் என்றால் 29 உறுப்பினர்கள். அதன் ஆரம்பகால தலைவர் யார் என்றால் கோட்டியப்பன், செயலாளர்யார் என்றால் மாடசாமி,பொருளாளர் பவுன்பாலையா இவர்கள் இருந்த விவரம் எனக்கத்தெரியும் என்றால் சரிதான். எனது அப்பா சாமிக்கண் சங்கத்தின் ஆரம்ப கால உறுப்பினராக இருந்தாா என்றால் சரிதான். 2ம்பிரதிவாதி செவந்தியின் மாமனார் ஊர்காவலன் என்பவரும் சங்கத்தின் ஆரம்ப கால உறுப்பினராக செயல்பட்டு வந்தார் என்றால் சரிதான். அவர் போனவருடம் 2023ல் இறந்து போனார் என்றால் சரிதான். சங்க நிலமானது ஒவ்வொரு உறுப்பினர்களுடைய பங்களிப்பு தொகையை வைத்து தான் வாங்கப்பட்டதுஎன்றால் சரிதான். எனது அப்பா சாமிகண்ணு எந்த வருடம் இறந்தார் என்றால் 2001ல் இறந்து போனார். பொதுவாக ஒரு உறுப்பினர் இறந்து போனால் அந்த இறந்த உறுப்பினர் வீட்டில் உள்ள வாரீசுகளின் சம்மதத்தின் பேரிலும் சங்க உறுப்பினர்களின் சம்மதத்தின் பேரிலும்இறந்த உறுப்பினர்களின் வாரீசுகளில்ஒரு நபரை உறுப்பினராக சேர்ப்பதில் வழக்கம் என்றால் சரிதான். நான் எப்படி சங்கத்தின் உறுப்பினராக வந்தேன் என்றால் வாரீசு அடிப்படையில் தான் வந்தேன். என் உடன் பிறந்தவர்கள் 4 ஆண்கள், 3 பெண்கள் என்றால் சரிதான். எனது நிருபண வாக்குமூலத்தில் இந்த சங்கமானது கடந்த 30 ஆண்டு காலமாக செயல்படவில்லை என சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். நான் உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்ட காலத்தில் தலைமை காரியதரிசியாக இ.மாடசாமி இருந்தார் என்றால் சரிதான். அந்த சமயத்தில் 16.12.2006ம்தேதிஇறந்துபோன கோட்டியப்பன் மகன் சாமிக்கண்,பி.கே.ஆறுமுகம் மகள் அய்யம்மாள், கோவில்பிள்ளை மகன் ஏசையா, மற்றொரு சாமிக்கன் மகன் கனகராஜ் ,சண்முகவேல் மனைவி அந்தோணியம்மாள்,

மெய்யேன் மனைவி அந்தோணியம்மாள், மூக்கன் என்ற மாடசாமி குமாரர் மாடசாமி, சீ.த.ஆறுமுகம் குமாரர் ஆபிரகாம்பிள்ளை, வே.செல்லையா மகன் எட்டுராஜ் ஆகியோர்கள் தீர்மானத்தின் அடிப்படையில் என்னை உறுப்பினராக சேர்க்கப்பட்டேன் என்றால் சரிதான். தற்போது அந்த தீர்மானத்தின் நகலை சாட்சியாக காண்பிக்கப்பட்டு வரிசை எண்.10ல் கண்டுள்ள எஸ்.கனகராஜ் என்ற கையொப்பம் என்னுடையதா என்றால் ஆமாம். சாட்சி மறுமுறை என்னுடைய கையெழுத்து இல்லை என்று சாட்சியம் அளிக்கிறார். எங்கள் ஊரில் ஏசையா உயிருடன் இருந்து வருகிறார் என்றால் ஆமாம். அவரை விசாரித்தால் நான் சொன்ன தேதியில் ஏற்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில் என்னை தேர்ந்தெடுத்த விவரம் தெரியவரும் என்றால் சரிதான். சந்திரராஜ் எனது தாய்மாமன் மகன் என்றால் சரிதான். அவர் எட்டையபுரம் பாரதியார் கூட்டுறவு நூர்பாலையில் பணிபுரிந்து எட்டையபுரத்தில் சொந்தமாக வீடு கட்டி குடும்பத்துடன் அங்கேயே வசித்து வருகிறார் என்றால் சரிதான். அவர் போன ஆண்டு தான் பணி ஓய்வு பெற்றார் என்றால் சரிதான். எங்கள் ஊரில் அவருக்குஇருந்த வீட்டை நாங்கள் வாங்கி அதில் குடியிருக்கிறேன் என்றால் சும்மா தான் இருக்கிறது அதில் யாரும் குடியிருக்கவில்லை பாதி இடிந்து பாதி வீடு உள்ளது. வாதி சந்திராஜ் அண்ணன் பெயர் பன்னீர்செல்வம் என்றால்ச ரிதான். சங்கம் மிக நஷ்டத்தில் இயங்கி வருகிறது நிலத்தை விற்க 25.04.1995 ஆம் வருடம் கோவில்பட்டியை சேர்ந்த சத்தியராஜ் மற்றும் 3 நபர்களுக்கு விற்பதற்காக முன் பணமாக ரூ.55,000/-சங்கத்தின் நிர்வாகிகளால் பெற்றுக்கொள்ளப்பட்டு அன்றைய தேதியில் இருந்த முக்கியதற்களால் ஒரு கிரைய ஒப்பந்தம் போடப்பட்டு கையொப்பம் செய்துள்ளார்கள் அதில் எனது அப்பாவும் கையொப்பம் செய்துள்ள விவரம் தெரியுமா என்றால் தெரியாது. அதில் எனது அப்பா கையொப்பம் செய்வாரா அல்லது கைரேகை செய்வாரா என்றால் அந்த கிரைய ஒப்பந்தத்தில் சாட்சிடம் காண்பிக்கப்பட்டு அதில் கண்டுள்ள சாமிகண் கையொப்பம் என்னுடைய தகப்பனாருடையதா என்றால் எனக்கு எழுதப்படிக்கத்தெரியாது. எனது அப்பா கையெழுத்தா என்று எனக்குத்தெரியாது. அதன் பின்னிட்டு உறுப்பினருக்கும் உறுப்பினர் அல்லாதவர்களுக்கும் பலகால கட்டங்களில் சொத்துக்களை கட்டுக்குத்தகைக்கு விட்டோம் என்றால் சரிதான். அந்த கட்டுக்குத்தகைக்கு விடப்பட்ட பணத்தை விகிதாச்சார அடிப்படையில் உறுப்பினர்களுக்கு பகிர்ந்து அளிக்கப்பட்டது என்றால் சரிதான். அந்த அடிப்படையில் 1,2 பிரதிவாதிகளுக்கு சங்க

சொத்துக்களை விற்பது சம்பந்தமாக 06.10.2007 தேதியிட்ட கிரைய உடன்படிக்கை ஆவணத்தை சாட்சியிடம் காண்பித்து கேட்டபோது கையெழுத்து என்னுடையது தான்.அந்த கிரைய உடன்படிக்கை போட்ட விவரம் எனக்குத்தெரியாது. அசல் கிரைய உடன்படிக்கை பி.வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. (வாதி தரப்பில் ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டு ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது). அந்த கிரைய உடன்படிக்கையின் அடிப்படையில் 1,2 பிரதிவாதிகளுக்கு கூட்டுக்கிரையம் செய்து கொடுக்கப்பட்டுவிட்டது எனக்கும், மற்ற 28 உறுப்பினர்களுக்கு நன்கு தெரியும் என்றால் எனக்கு தெரியாது. நான் கிரையத்தொகையில் கிடைத்த பங்குத்தொகையை மனப்பூர்கமாக பெற்றுக்கொண்டேன் என்றால் கட்டுக்குத்தகை பணத்தை ஊர்காவலன் கொடுத்தார் என்றால் மாடசாமி மூலம் என்னிடம் கொடுத்தார்.1,2,4,வாதிகள் வேப்பங்குளம் ஜவஹர் விவசாய சங்கத்தில் ஒருபோதும் உறுப்பினர்களாக இருந்து செயல்பட்டது இல்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.10 ஆவணத்தில் வழக்கில் தாக்கல் செய்துள்ள கூட்ட தீர்மானம், கூட்ட அறிவிப்பு ஏசையா கையொழுத்தோ,ஊர்காவலன் கையெழுத்தோ தீர்மானப் புத்தகத்தில் எந்த இடத்திலும் இல்லை என்றால் சரிதான். சங்கமானது 2007 க்கு பின்போ சங்கம் செயல்பாடுகள் முழுவதும் முடிந்து போய்விட்டது என்றால் சரியல்ல நாங்கள் எப்படி கட்டுக்குத்தகைக்கு விட்டோம் செயல்பட்டுக்கொண்டு தான் இருந்தது. 2006 க்கு முன்பு எந்த சங்க கூட்டமும் நடைபெறவில்லை என்றால் சங்கம் கூட்டப்பட்டது அந்த தொகையை பிரிப்பதற்கதாக கூட்டப்பட்டது. இந்த சங்கப்பதிவேட்டில் நீக்கம் செய்யப்பட்டுவிட்டது என்றால் அது பற்றிய விவரம் எனக்குத்தெரியுமா என்றால் ரினிவல் (புதுப்பிக்கவில்லை) செய்யவில்லை நீக்கம் செய்யப்படவில்லை. 2007 ஆம்ஆண்டு 1,2 பிரதிவாதிகள் தபசில் சொத்தை கிரையம் வாங்கிய விவரம் எனக்குத்தெரியும் என்றால் தெரியாது. கிரைய வாங்கிய விவரம் நான் உள்பட எங்கள் ஊரில் உள்ள சங்க உறுப்பினர்கள் அனைவருக்கும் தெரியும் என்றால் சம்பந்தப்படாதவர்களுக்கு தெரியும் எங்களை போன்றவர்களுக்குத்தெரியாது. அந்த சங்கத்தினுடைய முக்கியதஸ்தர்கள் மூலமாக சரியான பிரதிபிரயோஜனத்தின் அடிப்படையில் கங்கைகொண்டான் சார்பதிவாளர் அலுவலகத்தில் முறையாக கிரையம் பதிவு செய்யப்பட்ட ஒன்றாகும் என்றாலும் நான் கேட்கும் பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. கூடுதல் பணம் பெறவேண்டுமென்ற தீய எண்ணத்தில் உண்மை சம்பவத்தை மறைத்து சந்திரராஜ்

என்பவரின் தூண்டுதலின் பேரில் ஜோடனை செய்து காலதாமதத்தோடு இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. 1,2 பிரதிவாதிகளுக்கு இடையூறு ஏற்படுத்துவதற்காக இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வழக்கு சொத்துக்கள் நியாயமாக கிரையம் கொடுத்து வாங்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை</u> – இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்தை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு வாசித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒப்பம்)C.கருப்பசாமி,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
கோவில்பட்டி,
28.02.2024.